**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.37/2020**

2026–ம் ஆண்டு **ஜீலை மாதம் 29–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.3–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசீலன் | வா.சா | 3 |
| த/க/பெயர் | மணியன் | தொழில் | ரியல் எஸ்டேட் |
| கிராமம் | மண்டகபாளையம் | வட்டம் | திருச்செங்கோடு |
| வயது | 40 | நாள் | 29.07.2026 |

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 3ம் சாட்சி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னிடம் காட்டப்படும் கடந்த 23.03.2017 தேதியில் கனகலட்சுமி என்பவரிடமிருந்து பழனிவேல் என்பவர் ரூ.6 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு, அந்த கடனுக்காக கனகலட்சுமி என்பவர் கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்படி கடனுறுதி சீட்டை எழுதி, சாட்சி கையெழுத்து போட்டுக்கொடுத்தேன்.

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |